# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
புரட்டாதி 26
ஷவ்வால் பிறை 28
புதன் (12-10-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 36
தொலைபேசி: 352
விலை சதம் 35


# "தனிநாட்டுக்குக் குறைந்த எதுவும் தமிழருக்கு திருப்தியளிக்காது!"

## 'லண்டன் ஒபசேவர்' ஏட்டுக்கு வி. என். நவரத்தினம் பேட்டி

"ஒரு சுதந்திர தமிழ் நாட்டை நிறுவுவதற்கே கடந்த தேர்தலில் எமது மக்களிடம் இருந்து எமக்கு ஆணை கிடைத்துள்ளது. அதற்குக் குறைந்த எதுவும் எமக்குத் திருப்தியளிக்காது" இவ்வாறு அண்மையில் லண்டனுக்கு வந்திருந்த போது சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரெத்தினம் அவர்கள் கூறியதாக திரு. கொலின் லெகும் (COLINLEGUM) 'லண்டன் ஒப்சேவர்' பத்திரிகையில் (NEW CLASHES ARE FEARED IN SRI LANKA) என்ற தலைப்பில் எழுதிய தனது செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அப்பத்திரிகைச் செய்தி குறிப்பிடுவதாவது:

குடியரசுத் தலைவர்-தன் மையிலான ஒரு புதிய அரசமைப்புத் திட்டம் குறித்த பிரதம அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் கடந்த வார அறிவித்தலை அடுத்து ஸ்ரீலங்காவில் வன்முறை இனக்கலவரங்கள் ஏற்படும் ஆபத்து அமோகமாகவும், நம்பகமாகவும் அதிகரித்துள்ளது.

திருமதி ஸ்ரீமாவோ ஆட்சியை அமோகமான தேர்தல் வெற்றியால் அண்மையில் நசுக்கிய ஆளும்கட்சியின் 72 வயதான பிரதம அமைச்சர் தீவின் சனத்தொகையின் ஐந்தில் ஒரு பகுதியினரான 2.6 மில்லியன் தமிழர்களுக்கென்று ஒரு தனிநாடு அமைப்பதற்கான கோரிக்கையை கண்டிப்பாக நிராகரித்துள்ளார்.

தமது பழைய யாழ்ப்பாண இராச்சியத்தின் மரபு வழித் தமிழ்ப் பிரதேசங்களில் 24 ஆசனங்களில் 23 ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழம் தனிநாடாக வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தே தேர்தலில் போட்டியிட்டது.

தமக்கென ஒரு நாடு வேண்டுமென்பதற்கு குறைந்த எந்தத்தீர்வுக்கும்தமிழர்கள் இணங்கப்போவதில்லையென்று தமது லண்டன் வருகையின்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணைத் தலைவரான திரு. வி. என். நவரத்தினம் பா. உ. என்னிடம் கூறினார்.

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளபேச்சுவார்த்தைகளில் புதிய அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சியினரான தமிழர்களுக்கும் இடையில் எவ்வித உடன்பாடும் அடைய



முடியாதுபோனால் தமிழரின் ஓர் இரகசிய எதிர்ப்பு இயக்கத்தை அமைப்பதற்கு தீவிர திட்டங்கள் இருப்பதாகபிறிதொரு பிறப்பிடம் தோற்றுவாய் கூறுகிறது.

சுதந்திரத்துக்கு மிகக் குறைவான ஓரளவு தன்னாட்சியை ஆலோசிப்பதற்கான பிரதமரின் விருப்பத்தை நிராகரிப்பதற்குப் பந்தப்

—4-ம் பக்கம் பார்க்க

## காதறுத்த காடையர்கள்

அனுராதபுரத்தில் அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் வேலை பார்த்து வந்த தமிழ் உத்தியோகத்தர் ஒருவர். தமது சம்பளத்தை எடுப்பதற்காக நாடெங்கும் 'சகஜ நிலை' ஏற்பட்டு விட்டதென அரசாங்கம் கூறியதைநம்பி சென்ற வாரம் அனுராதபுரத்துக்கு சென்றிருந்தார். அங்கு அவரது சம்பளமும் பறிக்கப்பட்டு, கழுத்தை நோக்கி கத்தியும் வீசப்பட்டது. சிங்களக் காடையர்கள் அவரது கழுத்து நோக்கி கத்தியை வீசிய சமயம் தந்திரமாக தப்பி காதைக் கொடுத்தார்—காதுமட்டும் போயிற்று—கழுத்து தப்பியது உயிர்தப்பியது போதுமென்று ஓடி வந்துவிட்டார் தமிழ் ஈழத்துக்கு!


## சுதந்திரன் - ஆண்டு சந்தா வழங்குவீர்!

அன்புள்ள தமிழ் பேசும் மக்களே!

இதுவரை காலமும் கொழும்பில் இருந்து வெளியாகிய சுதந்திரன் பத்திரிகை 1977ம் ஆண்டு நிகழ்ந்த தமிழர் படுகொலையின் பின் தமிழ் ஈழத்தில் இருந்து வெளியாகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் கூடியவிரைவில் தமிழ் ஈழத்தில் குடியேற வேண்டுமென்பதற்கு முன் மாதிரியாக சுதந்திரன் பத்திரிகையை நிரந்தரமாக தமிழ் ஈழத்தில் இருந்தே அச்சிட்டுப் பிரசுரிக்க முடிவுசெய்துள்ளோம். மேற்படி முயற்சிக்கு உதவுமுகமாகவும் சுதந்திரன், ஞாயிறு, புதன் இதழ்களை நீங்கள் ஒரு வருடத்திற்கு தபால் மூலம் தவறாது உங்கள் வீடுகளிலேயே பெற்றுக்கொள்ளவும் ரூபா 50/- செலுத்தி சந்தாதாரராகுமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
சா. செ. சந்திரகாசன்,
இயக்குனர்-சுதந்திரன்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


## கொடி தினத்தில் வாரி வழங்குவீர்

சிங்கள நாட்டிலிருந்து சொத்து சுகங்கள் பறிக்கப்பட்டு, உயிர்ப்பலிகளுக்கு ஆளாகி வாழ முடியாமல் தமிழ் ஈழத்துக்கு அகதிகளாக கண்ணீரும் கம்பலையுமாக ஓடோடி வந்திருக்கும் தமிழ் மக்களுக்கு உதவுமுகமாக எதிர்வரும் வெள்ளி சனி (14, 15) ஆகிய தினங்களில் தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகம் கொடி தினத்தை நடத்துகிறது. தமிழ் அகதிகளின் கண்ணீரைத் துடைத்திட— அவர்களுக்கு புதுவாழ்வு, புனர்வாழ்வு வழங்கிடும் திட்டத்துக்கு உதவிட ஒவ்வொரு தமிழனுக்கும் அருமையான வாய்ப்பு இது.

தமிழ் மக்கள் தமது மண்ணில் தம் சொந்தக்காலில் நிற்கமுடியும் என்பதை எடுத்துககாட்டும் நோக்குடன் சீரிய பல திட்டங்களை முன் வைத்து செயற்படுகிறது தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகம். அந்தக் கழகத்தின் நல்ல நோக்கத்துக்கு உதவிட— தமிழ் அகதிகளின் மிடி அகன்றிட— வாழ்வு சிறந்திட கொடி தினம் 14, 15ல்! வாரி வழங்குவீர்! பாரிகளாய் மாறுவீர்!

## காவலுக்கு வந்த இராணுவ வீரரின்— காதல் சேட்டையும் காடைச் சேட்டையும்

காடையர்களிடமிருந்து பிரயாணிகளைக் காப்பாற்றும் பணிக்காக அனுப்பப்படும் காவலர்களே காடையர்களாக மாறிய அசம்பாவிதம் ஒன்று 5-9 77 மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ் வண்டியொன்றில் நடைபெற்றுள்ளது.

அன்று அதேபஸ்சில் யாழ்ப்பாணம் பிரயாணம் செய்த கல்முனை மக்கள்வங்கியில் கடமையாற்றும் திரு. எஸ் சதானந்த வடிவேல் எனும் இளைஞர் பஸ்சில் காவலுக்கு வந்த ராணுவக் காடையர்களால் மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் பற்றி திரு. எஸ். சதானந்தவடிவேல் எமது நிருபரிடம் தெரிவித்ததாவது:-

5-9-77ல் காலை 7. 15க்கு புறப்படவேண்டிய பஸ் அன்று 9. 05க்கே புறப்பட்டதாம். குறிப்பிட்ட இளைஞரின் பாதுகாப்பில் மட்டக்களப்பு மக்கள் வங்கியிலும் யாழ் வைத்தியசாலையில் தாதியாகவும் பணிபுரியும் இரண்டு பெண்கள் பிரயாணம் செய்தனர். இரண்டு இராணுவ வீரர்களும், பஸ் நடத்துநரும் அடிக்கடி பஸ்சை நிற்பாட்டி மது அருந்தி வந்ததாகவும் இரண்டு ராணுவவீரரும், குறிப்பிட்ட இரண்டு கன்னிப் பெண்களுடன் சேட்டைவிட்டனராம்.

கெக்கிராவையில் வைத்து இரு பெண்களையும் தேநீர் அருந்த வரும்படி அழைத்தனராம். பெண்கள் மறுத்ததுடன் குறிப்பிட்ட இளைஞர் வாங்கிக் கொடுத்த தேநீரை அவர்கள் அருந்தியதையும் அவர்கள் அவதானித்துக்கொண்டிருந்தனர்.

பஸ் ஓடிக்கொண்டிருக்கும்போதே பஸ் டிரைவரிடம் தாங்கள் சொல்லும் இடத்தில் பஸ்ஸை நிற்பாட்ட வேண்டும் என்று இராணுவ வீரர் கூறியதைக்

—4-ம் பக்கம் பார்க்க

## அமரர் வன்னியசிங்கம் நினைவு விழா

காலம்:- 3-10-77 வியாழக் கிழமை பி. ப. 5 மணி.

இடம்:- 'விவேகானந்தா மண்டபம் மஞ்சத்தடி இணுவில்.

தலைவர்:. பெ. கைலாசபதி அவர்கள்.

சொற்பொழிவு வழங்குவோர்;- திரு. மு. ஆலாலசுந்தரம் (சட்டத்தரணி) அவர்கள், கோவை மகேசன் அவர்கள் (சுதந்திரன் ஆசிரியர்) பண்டிதர் நா. இராசையா திரு. த. சின்னத்துரை

தமிழ் ஈழத்தேசியத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரை நம்பலாமா?

சிங்களம் தெரியாத காரணத்தால் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகளாகக் கணிக்கப்படமாட்டார்களென அரசியல் சட்ட திருத்த மசோதாவை பேரவையில் சமர்ப்பித்துப் பேசியபோது பிரதமர் கூறினார். இப்பேச்சை இந்நாட்டுத் தமிழ் நாளேடுகள் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்த போது படிக்க இனிமையாகத் தானிருந்தது. ஆனால் இதை எப்படி நடைமுறைப்படுத்தப் போகின்றார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரசைகளாக ஆக்கப் படப்போகின்றார்கள் என்ற காரணத்தினால்தான் காலஞ்சென்ற எம் தலைவர், தீர்க்கதரிசி, மூதறிஞர், செல்வா அவர்கள் 1948ம் ஆண்டில் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இலங்கை வாழ் இந்திய பாக்கிஸ்தானிய குடியுரிமை வாக்குரிமை மசோதாக்களைக் கொண்டு வந்து நிறைவேற்றியபோது இணைப்பாட்சியே தமிழருக்கு சிறந்த ஆட்சி முறை என வலியுறுத்தினார். 1948ம் ஆண்டிலிருந்து இன்றுவரை நடைபெற்ற நிகழ்ச்சிகள் இன் நாம் சிங்களவருடன் இனியும் சேர்ந்துவாழமுடியாதுஎன்பதைத் திட்டவட்டமாக உணர்த்திவிட்டன.

தமிழர்கள் "மணியோடர்"ப் பொருளாதாரத்திற்குள் தங்கியிருக்கின்றார்களெனக் கிண்டல் செய்யும் எம்மவரிற் சிலருக்குப் பிரதமரின் கூற்று மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் எல்லாரும் அப்படியல்ல. மற்றையோர்களை விடுத்து "மணியோடர்"ப் பொருளாதாரத்தில் தங்கியிருப்பவர்களெனக் கூறப்படும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் விடயத்தில் பிரதமர் என்ன மாதிரியான பரிகாரம் காணப்போகின்றார்? ஒரேநாளில் அரசாங்க சேவையிற் சேரும் பொன்னம்பலத்திற்கும் பொன்னம்பெருமாவிற்கும் சமநீதி வழங்கப்படுகின்றதா? சேவையிற் சேர்ந்து ஐந்து வருடங்களில் பொன்னம்பெருமா சிங்களவன் என்ற காரணத்தினால் சகல அரசாங்க சலுகைகளையும் பெறும் அதே நேரத்தில் பொன்னம்பலம் தமிழன் என்ற காரணத்தினால் சேவையில் சேரும்போது எடுத்த அதே சம்பளத்துடன் தனது பிள்ளைக்கு "ஆனா", "ஆவன்னா" பழக்கும்போதுதான், "அயன்ன", "ஆயன்ன" படிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றான். அப்படியிருந்தும் அரசகரும மொழியெனக் கூறப்படும் சிங்களத்தில் சித்தியெய்த முடிகின்றதா? மேலும் தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்த அளவில் அவர்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கின்றார்கள்.

(1) 1956க்கு முன் சேர்ந்த பழைய ஊழியர்

(2) 1956க்கு பின் சேர்ந்த புதிய ஊழியர்

பழைய ஊழியர்களுக்கு அவர்களின் சம்பள ஏற்றத்திற்கு சிங்களத் தேர்ச்சி தேவையில்லையெனக் கூறப்பட்டபோதிலும் உத்தியோக உயர்வுக்குச் சிங்களத்திற் சித்தியெய்த வேண்டுமென நிர்ப்பந்திக்கப் படுகின்றார்கள் சிங்களம் தெரியாத காரணத்தினால் இரண்டாந்தரப் பிரசைகளாக்கப் படவில்லையா?

புதிய ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்களை நாங்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) சிங்களத்தை விரும்பிப் படித்து பரீட்சை சித்தியெய்திச் சம்பள ஏற்றம் உட்படச் சகல அரசாங்க சலுகைகளையும் பெற்றுச் சந்தோசமாக வாழ்பவர்கள்.

"எப்படியோ" சிங்களப் பரீட்சைகளிற் சித்தியெய்தி மேற்கூறிய சலுகைகள் அத்தனையும் பெற்றவர்கள் (இதைச் சொல்வதற்கு நான் வெட்கப்படவில்லை)

இவர்கள் சிங்கள ஊழியர்களுடன் சமவாய்ப்பைப் பெற்றபோதும் சக சிங்கள ஊழியர்களும் சிற்றூழியர்களும் இவர்களுக்கு உரிய மதிப்பைக் கொடுப்பதில்லை.

புதிய ஊழியர்களில் மூன்றுவது பிரிவைச் சேர்ந்தவர்கள் பரிதாபத்திற்குரியவர்களாகக் கணிக்கப்பட்ட போதிலும் அவர்களின் லட்சியப் போக்குக் குறித்து மெச்சாமல் இருக்க முடியாது. சேவையிற் சேர்ந்து 2வருடங்களென்றால் என்ன 20 வருடங்கள் என்றால் என்ன ஒரேசம்பளத்தைப் பெற்றுக்கொண்டு மற்றையோரின் கிண்டல்கள், கேலிகளைப் பொருட்படுத்தாது இருக்கும் வீரர்கள் இவர்களைத் தமிழ்தேசிய வீரர்கள் வரிசையிற் சேர்க்கலாம் எனக் கூறினால் தற்புகழ்ச்சியல்ல. தங்களிலும பார்க்க வயது. திறமை அனுபவம் குறைந்த ஊழியர்களின் கீழ் காலத்தின் கோலத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டு வேலை செய்யும் ஆத்மஞானிகள். இழப்புகள் கணக்கிலடங்கா முக்கியமாக இவர்களின் எந்த இழப்புகளிலும்பார்க்க இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மனஇழப்பே ஈடு செய்யப்பட முடியாதது.

தமிழர்கட்குள்ளேயே இப்படியான ஏற்றத்தாழ்வுகளிருக்கும்போது பிரதமர் இதை எப்படிச் சமப்படுத்தப் போகின்றார்? மேற்கூறிய தமிழர்களின் வேறுபாடுகளைச் சமப்படுத்திய பின்தானே சிங்களவர்—தமிழர் ஏற்றத்தாழ்வுகளைச் சமப்படுத்த முடியும். நான்குறிப்பிட்ட மூன்றுவது வகையான தமிழ் அரசாங்க ஊழியர்களின் ஆன்ம இழப்புக்குத் தமிழ்ஈழத்தையல்ல ஸ்ரீலங்காவையேகொடுத்தாலும் ஈடாகுமா? இவர்களுக்கு பிரதமர் பெறவிருக்கும் ஜனதிபதிப் பதவி கூட ஒரு துரும்பல்லவா?

அடுத்து, மாவட்ட மந்திரிகள் பற்றி இந்நாட்டுத் தமிழ் நாளேடுகள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நாளிலும் பொழுதிலும் பயமுறுத்தி வருகின்றனர். தமிழ்ஈழக் கோரிக்கையை முன் வைத்துத்தான் த. வி. கூட்டணி பொதுத்தேர்தலில் 17 தொகுதிகளையும். உடல். பொருள். ஆவி, மூன்றையும் பறிகொடுத்துப் பயமுறுத்தப்பட்ட நிலையின் பின் பொத்துவில் தொகுதியையும் வென்றெடுத்தனர். சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழர்களின் வாக்குகள் உட்பட 52 சதவீதத்தைப்பெற்ற ஐ.தே.க. நடைமுறையிலிருக்கும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத அரசியல் அமைப்பைத் திருத்த முடியுமென்றால் தமிழீழத்தில் 67 சதவீத வாக்குகளைப்பெற்ற த. வி. கூ. ஏன் தமிழீழத்தை நிறுவ முயற்சிக்க முடியாது?. தமிழர்களின் நலம் குறித்து சுதந்திரன் பத்திரிகையொன்று மட்டுமே தமிழர் விடுதலைக் கூட்டணியினரைத் தட்டிக்கேட்க முடியுமே தவிர இலங்கையின் வேறெந்த ஏட்டிற்கும் அதிகாரம் கிடையாது. தமிழ் மக்கள் விரும்பினால் அன்றி தமிழர் விடுதலைக் கூட்டணிமாவட்ட மந்திரிப் பதவிகள் மட்டுமல்ல அரசாங்கத்தின் வேறெந்த பதவிகளையும் ஏற்கத் தமிழ்மக்கள் அங்கீகாரம் வழங்க மாட்டார்கள்.

தமிழ்ப்பிரதேசங்களில் இதுகாலவரை அரசாங்க அதிபர்கள், பொலிஸ் அதிபர்கள் விசேட ஆணையாளர்கள் முதலிய பதவிகளை தமிழீழத்தின் கேந்திர நிலையங்களில் சிங்களவர்கள் வகிக்கவில்லையா? இவ்வளவு இரத்தப் பலிகள் நிகழ்ந்த பின்னும்கூட யாழ் அரசாங்க அதிபரை மாற்றம் செய்யவோ யாழ்ப்பாணத்திற்கு ஒரு தமிழ்ப் பொலீஸ் அதிபரை நியமிக்கவோ பிரதமர் ஏன் நினைக்கவில்லை? இவற்றிலிருந்து தமிழர்தளுக்கு விமோசனம் அளிப்பது தமிழீழமேயன்றி மாவட்ட மந்திரிப்பதவிகளல்ல. இதை தமிழர் விடுதலைச கூட்டணியினருக்கு அறிவுரை கூறும் தமிழ் நாளேடுகள் கவனத்திற் கொள்ளவேண்டும். தமிழர் கூட்டணித் தலைவர்கள் அறிவும்ஆற்றலும்அனுபவமும் நிரம்பியவாகள் அவர்களுக்கு எதைச்செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்பது நன்றாகத் தெரியும் எனவே இந்நாளேடுகள் தங்கள் வியாபாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும் த. வி. கூட்டணியினரைத் தட்டிக் கேட்க அவர்களுக்கு வாக்களித்தவர்கள்நாங்களிருக்கின்றோம்.

சிங்களம் தெரிந்த தமிழன், சிங்களம் தெரியாத தமிழர் த. வி. கூக்கு வாக்களித்த தமிழன், ஐ. தே கக்கு வாக்களித்த தமிழன், ஸ்ரீலங்கா சு. க. க்கு வாக்களித்த தமிழன் இப்படி எல்லாத் தமிழர்களும் சிங்கள வகுப்பு வாதிகளில் பார்வையில் 'பறைத் தெமிள" தான் எனவே தமிழர்கள் எல்லோரும் தங்கள் வாழ்வைத் தமிழீழத்தில் தான் இனித் தொடங்கவேண்டும். மலைநாட்டுத் தமிழர்களில் பெரும்பாலானோர் கலவரத்தின் பின் அகதிகளாக இன்றும் தமிழீழம் நோக்கி வந்து கொண்டிருப்பது தமிழீழத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றதல்லவா?

தலைவலிக்குத் தலையணையை மாற்றினால் தலைவலி தீருமா? ஏற்ற வைத்தியம் செய்தாலே வருத்தம் தீரும். அதேபோல் அரசாங்கள் மாறுவதினால் தமிழர் பிரச்சனைகள் தீர்ந்து விடா. கடந்த பொதுத்தேர்தலில் அமோக வெற்றியீட்டிய ஐ. தே. க. தமிழர் பிரச்சனைகளைத் தீர்க்க அரசியல் அமைப்பில் மாற்றமோ, அல்லது புதிய அரசியல் அமைப்பையோ கொண்டுவரலாம். ஆனால் அடுத்து இப்படி வரும் இன்னொரு அரசாங்கம் இந்த அரசாங்கத்தினற் கொடுக்கப்பட்ட சலுகைகளைத் தட்டிப் பறிக்கலாம் அல்லவா? இதனால் தான் தமிழர் பிரச்சனைகள் என்ற நோய்க்குத் தமிழீழம் என்ற அறுவைச் சிகிச்சையே சிறந்த வைத்தியமாகும் வழவழத்த உறவிலும் பார்க்க ஒட்டறுத்த பகைமேலல்லவா?

இறுதியாக இந்நாட்டுத் தமிழருக்கு தமிழேடுகளுக்கு வள்ளுவன் தந்த வாக்குகள் இரண்டினைக் கூறி எனது கருத்துக்களை முடிக்க விரும்புகின்றேன்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் காவர்ந்தற்று

தலையிலிழிந்த மயிரணையர் மாந்தர்
நிலையிலிழிந்தக் கடை.

—சு. கருணானந்தன்

மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி.

# சிங்கள ஒட்டகத்துக்கு இடம்கொடுத்த தமிழ் குடும்பத்தின் கதை

ஒட்டகத்துக்கு தனது கூடாரத்துக்குள் இடம் கொடுத்தவன் அடைந்த பரிதாப நிலையை சிங்களக் குடும்பம் ஒன்றுக்கு தமது வீட்டை வாடகைக்கு கொடுத்த ஒரு தமிழ்க் குடும்பம் யாழ்ப்பாணத்தில் இப்போது அடைந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது வீட்டை சிங்களக் குடும்பம் ஒன்றுக்கு வாடகைக்கு கொடுத்துவிட்டு உத்தியோகம் காரணமாக ருகமையில் வசித்துவந்த தமிழ் குடும்பம் ஒன்று கலவரத்தின் பின்னர் அகதிகளாக்கப்பட்டு உயிர்தப்பி யாழ்ப்பாணம் வந்துள்ளது!

யாழ்ப்பாணத்தில் இவர்கள் வீட்டில் ஆறு வருடகாலம் வாடகையும் கொடுக்காமல் வசித்து வந்த சிங்களக் குடும்பம் — வாடகை தராவிட்டாலும் பரவாயில்லை — வீட்டைக் காலியண்ணினால் போதும் என்ற நிலையில் இருந்தனர் வீட்டுச் சொந்தக்காரர்கள் — இறுதியில் பொலீசார் முன்னிலையில் சிங்களக் குடும்பம், தமது சாமான்களையும் தூக்கிக்கொண்டு வீட்டைக் காலிசெய்துவிட்டுசெல்ல வீட்டுச் சொந்தக்காரர்கள் அதில் குடிபுகுந்தனர்.

இப்போது மறுபடியும் திரும்பிவந்துள்ள அச்சிங்களக் குடும்பத்துக்கு (ஏற்கெனவே வேறு ஓர் இடத்தில் வசிப்பிடம் கிடைத்த பின்னரும்) தாம் குடியிருந்த அதே பழைய வீடே தமக்கு வேண்டும் என்று அநியாயமாக அடம்பிடிக்கின்றனர். பொலீஸ் அதிகாரிகளோ சிங்களவருக்கே வீட்டைக் கொடுக்கும்படி அங்கு குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரரை நாள்தோறும் பயமுறுத்திவருகின்றனர். ருகமைக்கு நீங்கள் செல்லுங்கள்—முன்பு இருந்த சிங்களக் குடும்பத்துக்கு யாழ்ப்பாணத்திலுள்ள உங்கள் சொந்த வீட்டை கொடுங்கள்—இல்லாவிடில் சாமான்களை தூக்கியெறிந்து உங்களை விரட்டுவோம் என்று பொலீசார் மிரட்டுகின்றனர்.

இதுவிடயம் இப்போது நீதிமன்றத்துக்கு சென்றுள்ளது வீட்டின் சொந்தக்காரர்களான தமிழ்க்குடும்பத்தை பொலீசார் பலவந்தமாக வெளியேற்றினால் அவ்விடத்தில் ஆயிரக்கணக்கானோர் அந்த அநீதியை எதிர்த்து சத்தியாக்கிரகம் [illegible] தயாராக இருக்கின்றனர்

குறித்த சிங்களக் குடும்பத்துக்கு புத்தபிக்கு ஒருவர் பக்கபலமாக இருக்கிறாராம்:

சிங்களவர்களுக்கு தமது வீடுகளை வாடகைக்கு கொடுத்துள்ளவர்கள் இச்சம்பவத்தால் அச்சம்கொண்டுள்ளனர்.

# இன வெறி ஏற்படுத்திய நன்மை

கந்தளாயில் இன்றைவரை ஏற்படாத தமிழ் இன ஒற்றுமை அண்மையில் நிகழ்ந்த கலவரத்தின் பின் ஏற்பட்டுள்ளது கந்தளாய் சிவன் கோயிலை மையமாக வைத்து எழுந்த இப்பிரச்சனை இதுவரை காலமும் கைகூடவில்லை. தற்போது இங்குள்ள உணர்ச்சிமிகு இளைஞர்களால் சாதிப்பிரச்சனைக்குமுற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. வருகின்ற உற்சவத்தின்போது சிறுபான்மை இனமக்களையும் கொண்ட பரிபாலன்சபை அமைக்கப்படும் என்ற உறுதிமொழியையும் தற்போதைய செயலாளர் திரு. கணேசலிங்கம் இளைஞர்களிடம் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேரள சமாஜத் தலைவரின் வேண்டுகோளாவது

# ஜே. ஆர். செவிகளில் ஏறுமா?

"கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் நிகழ்ந்த இனக்கலவரங்களின் போது தென்னிலங்கை வாழ் இலங்கை, இந்தியத் தமிழ் மக்கள் மட்டுமல்லாது பல கேரளக் குடும்பங்களும் கலவரங்களால் பாதிக்கப்பட்டு இன்று அகதிகளாகியுள்ளனர். இவர்களில் இலங்கைக் குடியுரிமையைப் பெற்றிருப்பவர்கள் அதனைத் துறந்து, கொள்ளை' தீவைப்பு ஆகியவற்றால் அழிந்த தங்கள் சொத்துக்கள் போக எஞ்சியுள்ளவற்றைத் தம்முடன் எடுத்துச் செல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கினால் அவர்கள் இந்தியா செல்ல விரும்புகின்றனர். இது தொடர்பாக இந்திய யூனியன் அரசுடனும், கேரள மாநில அரசுடனும் இத் துர்ப்பாக்கிய பாதிப்புக்குள்ளானவர்களுக்கு புதிய வாழ்வை அங்கு ஆரம்பிக்க உதவுமாறு தாம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக", இலங்கை கேரள சமாஜத்தின் தலைவரும் சர்வதேச புகழ்பூத்த பகுத்தறிவுவாதியுமான டாக்டர் ஏபிரகாம் கோவூர் இலங்கைப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுககு இலங்கை கேரள சமாஜத்தின் சார்பில் விடுத்த வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

கேரளத்தைச் சேர்ந்த இவர்களது பிரச்சினையை மனிதாபிமானத்துடன் அணுகி, இவர்களிடம் எஞ்சியிருக்கும் சொத்துக்களை இவர்கள் கேரளத்துக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு தங்களைக் கோருவதுடன், தம்மீது எத்தகைய பிழையுமற்ற போதும் பெரும் இழப்புக்குள்ளான இவர்களது நஷ்டத்திற்கும் ஈடுசெய்வது இலங்கை அரசின் காருண்ய மிக்க ஒரு செயலாக அமையும் என்றும் மேற்படி மகஜரில் குறிப்பிட்டுள்ளார். டாக்டர் கோவூர் தொடர்ந்தும் குறிப்பிடுவதாவது—

கடந்த 30 வருடங்களில் தமிழர் மட்டுமல்லாது ஏனைய சிறுபான்மைச் சமுகத்தவர்களும் இனப்பாகுபாட்டிற்கும் இயலாமைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதனால் பெரும்பாலான (போத்துக்கேய ஒல்லாந்த வம்சாவழியினரான) பறங்கியர் நாட்டை விட்டே வெளியேறியுள்ளனர். இவர்கள் அவுஸ்திரேலியா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகளுக்குச் சென்று குடியேறியுள்ளனர். 30ஆண்டுகால கல்வி, கலாச்சார, சமய பாகுபாடுகள் தான் பறங்கியர் சமுதாயம் நாட்டைவிட்டுக் குடிபெயரவும், தமிழர்களது தனிநாட்டுக் கோரிக்கை ஆகியவற்றுக்கும் காரணமாகும்.

எல்லா மக்களுக்கும் மொழி, இனம், மத, சாதி வேறுபாடின்றி சம சந்தர்ப்பம் வழங்குவதே தங்களின் இலட்சியம் எனப் பலமுறை தாங்கள் அறிவித்ததுபோல அதனை பின்வரும் வழிகளில் அடைய முடியுமென்று நம்புகிறோம்.

— நாம் மூன்று மொழிகளாற் செயற்படுவோம்.

— இலங்கை அரசானது மதச் சார்பற்றதாக இருக்கட்டும். இந்தியா போன்று எமது மக்களது மதம் அவர்களது சொந்த விஷயமாக இருக்கட்டும்.

— எந்த மத அல்லது மத நிறுவனங்களுக்கும் அரசாங்க நிதி செலவிடக்கூடாது.

— அரசாங்க நிறுவனங்களில் தகுதி ஒன்றே தெரிவுக்கான நிபந்தனையாக வேண்டும்.

அரசாங்கப் பத்திரங்களை நிரம்பும்போது தேசிய இனம், தகைமைகள் தவிர்த்து, மதம், மொழி இனம் ஆகியவற்றை வெளியிடக் கேட்கக்கூடாது.

இவ்வாறு பிரதமர் ஜே. ஆருக்கு எழுதியுள்ள கடிதத்தில் டாக்டர் கோவூர் விருப்பம் தெரிவித்துள்ளார். புதிய அரசமைப்புத் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவிருக்கும் பிரதமர் டாக்டர் கோவூரின் ஆலோசனைகளைச் செயல் படுத்தும் வகையில் நாட்டை மதசார்பற்றதாக மாற்ற முன்வருவரலாமென்று நாட்டின் பகுத்தறிவு, வாதிகள் கேட்கின்றனர்.

வாயளவில் தேசியம் இன ஐக்கியம் பற்றிப் பேசுபவர்கள் டாக்டர் கோவூரின் குறைந்தபட்ச கோரிக்கைகளையாவது செயல்படுத்த மாட்டார்களா என்று நாட்டு நலனில் அக்கறை கொண்ட நடு நிலையாளர் அங்கலாய்க்கின்றனர்.

மாறாக இந்த நாட்டில் பறங்கியர் சமூக இனமழிந்து அருகியது போன்று சமீபத்தில் ஏற்பட்ட கலவரங்களையடுத்து கேரள, தமிழக மக்களும் அருகிப்போக இனவொழிப்பு நடவடிக்கைகள் மூலம் எஞ்சியுள்ள மலாய், முஸ்லீம், தமிழ் மக்களும் அருகிப்போக வேண்டுமா? செயல்படுத்தப்படாத உதட்டளவிலான தேசியமும் ஐக்கியமும் ஏனைய சிறுபான்மை மக்களை இனம் அருகச் செய்து பௌத்த சிங்கள ஒருமைப்பாட்டையே இலக்காகக் கொண்டது என்பதுதான் இந் நாட்டு சிறுபான்மை மக்கள் நடைமுறையில் கண்ட அனுபவமாகும். பறங்கியர், அவுஸ்திரேலியாவுக்கும் கனடாவுக்கும் ஓடியது போல் கேரள தமிழக குடும்பங்கள் தத்தம் தாய் நாட்டுக்கு ஓடத் துடிப்பதுபோல் இலங்கை வாழ் மலாயர்கள், முஸ்லீம்கள், தமிழர்கள் எந்த நாட்டுக்கு ஓடுவது? மரபுவழித் தாயகத்தை விரைவில் மீட்க வேண்டிய அவசியத்தை சம்பந்தப்பட்ட பறங்கியர், மலையாளிகள், இந்தியர்களது வெளியேற்றம் பூர்வ குடித் தமிழ் மக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் உணர்த்தியுள்ளது. — திரவியம்

## அஞ்சலி

புங்குடுதீவு இளைஞர் பேரவையின் முன்னணித்தொண்டரும் தமிழீழ விடுதலையின் முக்கிய ஊழியனாக மட்டுமின்றி போராட்ட வீரனாகவும் விளங்கிய 19 வயது நிரம்பப்பெற்ற அருமை நண்பன் திரு. அ. கேதீஸ்வரன் அவர்களின் ஈமக்கிரியைகளை அவர் விரும்பிய வண்ணம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் கொடியால்போர்த்து, அதே கொடிகள் ஊர்வலத்தை அலங்கரிக்க, புங்குடுதீவு இளைஞர் பேரவையின் சார்பில் எம் இறுதி அஞ்சலியை 22-9-77ல் செலுத்தி விட்டு இதனை எழுதுகிறோம்.

ஓர் உத்தமத் தொண்டனும் உறுதிவாய்ந்த இலட்சிய இளைஞனுமாகிய நண்பன் கேதீஸ்வரன் யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் மாணவனாயிருக்கும் போதே இந்த அகால மரணம் அவரைச் சூறையாடிச் சென்று விட்டது. அவரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியுற இறைவனை வேண்டுகிறோம்.

க. மகாலிங்கம்,
த. இ. பே. செயலாளர்
புங்குடுதீவு.

# பாவம் நீதியமைச்சர்

## கனடாவில்ஏற்பட்ட கலக்கம் இன்னும் தீரவில்லை

கனடாவுக்கு மேற்கொண்ட சுற்றுலாவின் போது அங்குள்ள உணர்ச்சிமிகு தமிழ் இளைஞர்களால் செம்மையான பாடம் படித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள நீதி அமைச்சர் தேவநாயகத்திற்கு அங்கு ஏற்பட்ட அலறலும் உளறலும் இங்கு வந்த பின்னரும் ஓய்ந்த பாடில்லை போலும், அதுதான் 5-10-77ல் தேசியப் பேரவையில் ஏதேதோ உளறியிருக்கின்றார்.

ஆகக்குறைந்த எண்ணிக்கைகளால் ஏதோ பெரும்பாடுபட்டு தனது ஆசனத்தைக் காப்பாற்றிக் கொண்டதை அந்த இளைஞர்கள் நினைவூட்டிய பின்னர்கூட கிழக்கு மாகாணமக்கள் தனிநாடு அமைப்பதற்கு ஆணையிடவில்லையென்று கூசாமல் கூறியிருப்பதிலிருந்து கிழக்கு மாகாணமே தன்னுடைய ஆளுமையின் கீழே தான் இருக்கின்றது என்று கனவு காண்கின்றார்

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிகாலத்தில் கிழக்கு மகாணத்தில் இருந்து தமிழரசுக்கட்சியின் பிரதிநிதிகள் மூவர் தெரிவு செய்யப்பட்டதையும், தற்பொழுது கிழக்கில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகள் நால்வர்தெரிவு செய்யப்பட்டுள்ளதையும், நீதி அமைச்சரின் புத்திகிரகிக்கத் தவறிவிட்டது ஏன் என்று புரியவில்லை.

அதுதான் போகட்டும். மட்டுநகர் முதவர் திரு. இராசதுரையவர்கள் தமிழர் கூட்டணியின் உத்தியோக பூர்வமான வேட்பாளர் அல்லவென்பதுபோலும் காசிஆனந்தனே கூட்டணியின் உத்தியோகபூர்வமான வேட்பாளர் என்று வேறு உளறிக் கொட்டியிருக்கின்றார்.

காசிஆனந்தனை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் என்றும் திரு. இராசதுரையவர்களே உண்மையான த. வி. கூ. வேட்பாளர் என்றும் தேர்தல் காலங்களிலும் அதன் முடிவிலும் தற்பொழுது அமைச்சரின் புகழ்பாடும் தினபதியே எழுதிருந்ததைத் தானும் அவர் படிக்க வில்லையா? அல்லது த.வி.கூ. உதய சூரியன் சின்னத்திலேயே மட்டுநகர் முதல்வர் போட்டியிட்டு வென்றதைத்தானும்மறந்துவிட்டாரா? தேர்தல் காலங்களில் உதயசூரியனுக்கு விழும் வாக்குகள்மட்டும் தான் தமிழ் ஈழக்கோரிக்கைக்கு விழும் வாக்குகள் என்று மட்டுநகர் பகுதியில் ஒருசிலர் செய்த பிரச்சாரங்கள் தானும் அமைச்சரின் காதுகளில்விழ வில்லையா.

எல்லாம் விழுந்திருக்கும். எல்லாம் அறிந்திருப்பார் அந்த அளவுக்கு எமது நீதி அமைச்சர் மறதிக்காரரல்ல ஆனால் என்ன செய்வது பாவம், கனடாவில் ஏற்பட்ட கலக்கமும் பதட்டமும் இன்னும் தீரவில்லை போலும்.

— திரவியன்

## அமரர் இராசமாணிக்கம் வழி தொடர்வோம்!

இன்பத் தமிழுக்காக, இனத்திற்காக வாழ்ந்து, வழிகாட்டியாகத்திகழ்ந்து இனம் சுதந்திரம் பெறப் போராடும் சமயத்தில் காலனின் கையில் அகப்பட்டு, காலத்தை சுருக்கிக் கொண்ட இன்பத் தமிழன், இனியதமிழன் பட்டிருப்பு முன்னாள் பா. உ. இராசமாணிக்கத்தின் 3வது ஆண்டு நினைவு தினம் 7-10-77ல் தமிழ் பேசும் மக்களால் அனுட்டிக்கப் பட்டது.

போராட்டக் காலத்தில் அதி சிறந்த போர்வீரர்களை இழந்தோம், அந்த வரிசையில் இடம் பெற்ற இணையில்லா வீரன்தான் இந்த இராசமாணிக்கம் இராஜ பரம்பரையில் இவர் பிறந்திருக்காவிட்டாலும் அவர் எமது இனத்தின் இராஜாவாக பிறந்ததையிட்டு நாம் பெருமைப்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

நவரத்தினங்களில் சிறந்தது மாணிக்கம் எமது இனத்திற்கு கிடைத்த இந்த இராசமாணிக்கம் அதைவிடச் சிறந்தது, மங்காது புகழ் பரப்பவிருந்த இந்த மாணிக்கம், வெகு விரைவில் மங்கிவிடும் என நாம் நினைக்கவில்லை.

இனத்தின் இருளை அகற்ற வந்த இராசமாணிக்கம் இன்றுஇருப்பாரானால் இதயமில்லாத இரும்பு உள்ளம் கொண்ட உதவாக்கரைகளுக்கு உகந்த பாடம் படிப்பித்திருப்பார்.

எமது இனம் வாழவேண்டும்; உரிமைகள் பெற வேண்டும் என எமது கட்சிக்காக காலமெல்லாம் உழைத்த இவர் இறுதிக் கட்டத்தில் எம்மை விட்டு சென்றது மிக வேதனை தான்.

பாராளு மண்டபத்திற்குள் நுழைந்திடவேண்டும் முழு மந்திரியாகி விட வேண்டும் மாலைகள் பல சேர்ந்திட வேண்டும்; மாணிக்க கட்டிலிலே உறங்கிட வேண்டுமென்ற ஆசையோ நினைப்போ, இந்த மாணிக்கத்திற்கு இருக்கவில்லை.
விடுதலைமண்டபத்திற்குள் நுழைந்திடவேண்டும் விடுதலை மந்திரியாகிட வேண்டும்; இனத்தின் வெற்றி மாலைகள் பல சேர்ந்திட வேண்டும், சுதந்திரக்கட்டிலிலே உறங்கிட வேண்டும், என்ற தீராத ஆசையும் மறக்கமுடியாத நினைவுகளும்தான் இந்தமாணிக்கத்திற்கு இருந்தது;

அதன் ஆசையையும் நினைவையும் பூர்த்தி செய்து வைக்க காலம் இடம் கொடுக்கவில்லை இனத்தின் இருளை அகற்ற வந்த இளம் மாணிக்கங்கள் மங்காது இனத்தின் இருளை வெகு விரைவில் அகற்றும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

போராட்டவீரன் இராசமாணிக்கம் எம்மை விட்டு சென்றாலும் அவர் பணி தொடர்வது எமது பிரதான கடமை இதைநாம் மறந்தால் எமது இனத்திற்கு செய்யும் பெருந்துரோக மாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# சுகாதார அமைச்சருக்கு வரலாறு சூனியமா?

## மந்திரியாருக்கு மகாவம்சமும் தெரியாது போலும்!

கி. மு. 500ல் நிகழ்ந்த விசயனின் வருகை தொடக்கமாக, உண்மையும் பொய்யும் புளுகும் கற்பனையும் கலந்து, மகாநாமன் என்னும் தேரோவால் கி.பி. 600ம் ஆண்டளவில் பாளி மொழியில் எழுதப்பட்ட 'மகாவம்சம்' ஒன்றேதான் இலங்கையின் பழைய வரலாற்றை அறிவிக்கும் ஒப்பற்ற நூலாக திரு. ஈ.எல். சேனநாயகா கருதுகிருர்!

1947ம் ஆண்டிலிருந்து இலங்கைப் பாராளுமன்றத்தில் சிங்களப் பிரதிநிதிகளாக நுழைந்தவர்களின் தனிப்பட்ட தகுதியையும் ,அறிவுத்திறனை'யும் கருத்திற் கொண்டு பார்க்கும்போது, திரு ஈ. எல். சேனநாயகா போன்ற 'அறிவாளிகள்' பாராளுமன்றத்தில் இருப்பது வியப்பன்று. இவர்கள்தாம் சிங்கள மக்களை வழிநடத்தும் தலைவர்கள்! ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சருக்கரை தானே!

எம்மைப் பொறுத்தவரையில் இலங்கையின் வரலாற்றை மகாவமிசத்தால் மாத்திரமன்றிகிறீத்து பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முந்திய செய்திகளைக் கூறும் இராமாயணம் பாரதம் புறநானூறு சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களாலும் நிலவியல், உயிரியல், மனிதப் பண்பாட்டியல் ஆகியவற்ருலும்புதைபொருள் ஆராய்ச்சிகளாலும் இலங்கைக்கு வந்து சென்ற பிறநாட்டு யாத்திரிகளுடைய பிரயாணக் குறிப்புகளாலும் அறிகின்ரேம்.

விசயன் வருகைமுதல் சிங்கள மன்னர்வரலாறுகளையே கூற எழுந்த நூலாகிய மகாவமிசத்துக்கு தமிழர்—தமிழரசு பற்றிய செய்திகளைக் கூறவேண்டியதேவையிருக்கவில்லை; இருந்தபோதும், அங்கும், தமிழர் பற்றிய குறிப்புக்கள் வருவதை திரு. ஈ. எல். சேனநாயகா அறியார் போலும்!

அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு 40 ஆண்டு நல்லாட்சி செய்த ஏலரா (எல்லாளன்)வைப் பற்றிமகாவமிசம்கூறுகிறது. அன்றியும், மொத்தம் 14 வருடம் 7மாதம் அரசாட்சி செய்த தமிழரசர் ஐவரை மகாவமிசம் குறிப்பிடுகிறது. துட்டகைமுனுவின் தந்தை.

"மகாகங்கை நதிக்கு இந்தப் புறமுள்ள நாடு நமக்குப் போதும்" என்றும் அப்பால் தமிழருடன் போர் செய்யக்கூடாதென்றும் மகனிடம் கூறுகின்ற செய்தியை மகாவமிசத்தில் (அத்தியாயம்: 24) காணக்கூடியதாகவுள்ளது. திரு சேனநாயகா மகாவமிசத்தைக் கற்கவில்லை; தம்போன்ற யாரோ கேள்விச் செவியன் மூலமே கேட்டறிந்தனர் போலும்! "கல்லாத மேற்கொண்டொழுகல் கசடறவல்ல தூஉம் ஐயம் தரும்" என்ருர் வள்ளுவனுரும்.

"15ம் நூற்ருண்டில் வடக்கில் பாவிக்கப்பட்ட நாணயங்களில் எல்லாம் சிங்கள அரசர்களின் முத்திரையே பொறிக்கப்பட்டிருக்கிறது. வடக்கிலிருந்த அரசு, அனுராதபுர அரசனின் முத்திரை பொறிக்கப்பட்ட நாணயங்களையே பாவித்திருக்கிறது என்பதற்கு ஆதாரம் உண்டு. தமிழ் இராச்சியம் இருந்ததற்கு அடையாளமாக வடக்கிலோ கிழக்கிலோ பாவிக்கப்பட்ட ஒரு நாணயத்தையாவது காட்டமுடிந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சவால் விடுகிறேன்"—இவ்வாறு திரு. ஈ. எல். சேனநாயகா பேசியிருக்கிருர். இக் கூற்று, உண்மைக்கு மாருனது என்பது ஒருபுறமிருக்க, இதிலுள்ள முரண்பாடுகளை இங்கு சுட்டிக் காட்டவேண்டியது எமது கடமையாகும்.

வடக்கில் புதைபொருளாகக் கிடைத்த ஒரு சில நாணயங்கள் அங்கு புழக்கத்தில் இருந்தவை என்று கூறமுடியுமா? இந்திய நாணயங்கள் சில இங்கு எம்மிடம் உள்ளன; ஆகவே, அவை இங்கு புழக்கத்தில் உள்ளன என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? வடக்கிலிருந்த அரசு, அனுராதபுர அரசனின் முத்திரை பொறிக்கப்பட்ட நாணயங்களையே பாவித்திருக்கிறதாகக் கூறும் திரு. சேனநாயகாவிடம் கேட்கிறேம்: வடக்கில் ஒரு அரசு இருந்ததை ஒத்துக்கொள்கிறீரா? அப்படி இருந்த அரசு, தன் முத்திரை பொறித்த நாணயங்களை புழங்காது, அனுராதபுர அரசனின் முத்திரை பொறிக்கப்பட்ட நாணயங்களைப் புழங்கி வந்தது ஏன்?

போத்துக்கீயர் — ஒல்லாந்தர்— ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றிய அண்மைக் காலச் சரித்திரத்திலேயே இலங்கையின் வட பகுதியில் பண்டாரவன்னியன், சங்கிலியன் முதலிய தமிழ் மன்னர்கள் ஆண்டதும், வெற்றி கொள்ளப்பட்டதும் அவர்களுடைய நினைவாக உள்ள கல்வெட்டுகள், பொருட்கள், இடிபாடுகள் ஆகியன எல்லாம் பொய்யா?

முன்னர் செகராசசேகரன் பரராசசேகரன் முதலிய சிங்கையாரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை ஆண்ட செய்திகளைக் கூறும் யாழ்ப்பாண வைபவமாலை முதலிய எங்கள் வரலாற்று நூல்களும் பிறவும் பொய்யா? ஆக, மகாவமிசம் கூறுவது மட்டுந்தானு உண்மை?

மகாவமிசம் விசயன்முதல் மகாசேனன்வரை சிங்கள மன்னர் பலரைக்கூறுகிறதே அவர்கள் காலத்தில் புழக்கத்தில் இருந்த ஒரு நாணயத்தையாயினும் காட்ட முடியுமா? என திரு. சேனநாயகாவிடம் கேட்கவிழைகிரேம்.

வடக்கில் புழக்கத்தில் இருந்த நாணயங்கள் கிடைக்கவில்லை; அல்லது, நாணயங்கள் புழக்கத்திலிருக்கவில்லை; பண்டமாற்று முறையே இருந்தது எனின் வரும் குற்றமென்ன? இங்கும் சில உலோகங்களும் கற்களும் நாணயங்களாக பாவிக்கப்பட்டுவந்தன என்பதற்கு பழம் பொருட்காட்சிச் சாலையில் அவைகளுண்டு என்பதையும் கூறிவைக்க விரும்புகிரேப்!

மேலே குறிப்பிட்ட விடயங்களினுல் திரு. சேனநாயகாவைத் திருத்துவது எமது நோக்கமன்று! தமிழ் மக்களிடையே ஏற்படக்கூடிய ஐயப்பாடுகளைப்போக்குவதும் 'தமிழீழக்' கொள்கையில் உறுதியாக நிற்கத் தூண்டுவதுமே எமது எண்ணமாகும்.

முன்னர் எமக்கு ஒரு அரசு இருந்ததோ? இல்லையோ? இன்று இங்கு நாம் ஒரு தேசிய இனத்தகுதி உடையவராக இருக்கிரேம்; ஆகவே எங்களுக்கென ஒரு தனிநாடு அமைப்பதற்கு நாம்புதிதாக முயன்ருலும் தவறில்லை என்பதே எமது உறுதியான முடிவாதல் வேண்டும்!

மலர்க தமிழீழம்!

பண்டிதர் வீ. பரந்தாமன்,

## காங்கேசன்துறை தொகுதி அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டம்

காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்தி வேலைகள் ஆலோசனைக் கூட்டம் 12-10-77 புதன்கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் காங்கேசன்துறை தொகுதி பா. உ. அ. அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறும்;

அக்கூட்டத்தில் வீடமைப்புத் திட்டங்கள், கிராமிய மின்திட்டங்கள், கிராம திடீர் பாலங்கள் அமைத்தல் நீர் விநியோகத் திட்டங்கள், பொதுக் கிணறுகள், புதிய வீதிகள் அமைத்தல், பழைய வீதிகள் திருத்தல், சந்தைக் கட்டிடங்கள். சந்தைகள் அமைத்தல், விளையாட்டு மைதானங்கள், சுடுகாடுகள் அமைத்தல், அரசவைததிய சாலை வசதிகள் பற்றி ஆலோசனை செய்யப்படும்.

## தனிநாட்டுக்கு ...

—4-ம் பக்கத்தொடர்

பட்டவர்களாக தமிழர் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளார்கள்.

புதிய அரசாங்கத்தைத் தீங்கிழைத்து வீழ்த்துவதற்கு சிங்களவர்களுக்கும் தமிழருக்கும் இடையேயுள்ள வகுப்புவாத மோதல்களை உபயோகிப்பதற்கு தோல்வியடைந்த திருமதி ஸ்ரீமாவோவின் தீவிரவாத சக்திகளுக்கு அளிக்கும் வாய்ப்பு வளர்ந்து வரும் இந்த நெருக்கடியில் மற்றுமோர் ஆபத்தான பூதமாகும்.

ஆகக் குறைந்த பட்சம் 215 உயிர்களைப் பலி கொண்டு, அனேகமாக ஒரு மில்லியன் பெறுமதியுள்ள தமிழர் உடைமைகளை நிர்மூலமாக்கி, ஆயிரக்கணக்கான தமிழர்களைத் தமது வீடுகளில் இருந்து நிலைகுலைந்தோடவைத்ததில் முடிவடைந்ததுமான கடந்த மாதத்தில் நிகழ்ந்த பயங்கரமான இனக்கலவரங்கள், திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு விசுவாசமான பொலிசாராலும், தீவிரமான கட்சி ஆதரவாளராலுமே ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டது.

தமது கட்சியின் நிருபணமான விசுவாசிகளையே பொலீஸ் மற்றும் இராணுவப் படை அணியில் சேர்த்துக் கொள்வதற்கு ஒரு விசேஷ முறையை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தமது பதவிக் காலத்தில் வைத்திருந்தார் கடந்த மாதம் சிங்களவர் கும்பல்களால் தமிழர்கள் தாக்கப்பட்டபோது அனேக பொலீசார் அருகே செயலற்று நின்றிருந்தார்கள். தமிழர்கள் மிகப்பெரும்பான்மையினராகவதியும் தமிழ்ப் பகுதிகளில் வாழும்சிங்களவர்களை தீவிரவாத தமிழ் இளைஞர்கள் பதிலுக்குத் தாக்கியபோது பொலீசார் செயல்பட்டிருக்கிருர்கள்.

திருமதி பண்டாரநாயக்காவின் நீண்டகால ஆட்சியின் போது தமிழர்களுக்கு விரோதமாக மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான பாரபட்ச நடவடிக்கைகள் சம்பந்தமான தமிழ் மக்களது முறைப்பாடுகளின் நியாயத்தை புதிய ஆட்சி ஏற்றுக் கொண்டிருப்பதே தற்போதைய துயர நிகழ்ச்சியாகும்.

கல்வி, பொதுச் சேவைத் துறைகளில் உத்தியோகம் பெறுவதில் நிகழும் பாரபட்சங்களைக் குறிப்பாகக் கொண்டு, தமிழர் அனுபவிக்கும் பாரிய நியாய விரோத நடவடிக்கைகளை அகற்ற ஏற்கனவே வழிவகைகள் காணப்பட்டுவருவதாக லண்டனில் நிகழ்ந்த ஒரு பேட்டியில் ஸ்ரீலங்காவின் புதிய நிதியமைச்சரான திரு. ரொனி டி. மெல் என்னிடம் தெரிவித்துள்ளார். உயர் கல்வியில் சிங்களவர்களுக்கு சாதகமாக விருந்த கோட்டா முறை ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளது.

திருமதி பண்டாரநாயக்காவின் பதவிக் காலத்தில் வளர்ச்சியடைந்த தனிநாட்டுக் கோரிக்கை, தமிழ் மக்களது அடிப்படையான மனக்குறைகளுக்குத் தீர்வுகாணப்பட்டதும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதானமான இலட்சியமாக இல்லாது போய்விடுமென்று தாம் உறுதியாக உணருவதாக திரு. டி. மெல் கூறினுர்.

இந்த நம்பிக்கையை உறுதியுடன் நிராகரித்த திரு. நவரத்தினம் "ஒரு சுதந்திரமான தமிழ் நாட்டை உருவாக்குவதற்கே எமது மக்களிடம் இருந்து எமக்கு ஒரு ஆணை கிடைத்துள்ளது என்றும் அதற்குக் குறைந்த எதுவும் எமக்குத் திருப்தியளிக்காது" என்றும் தெரிவித்தார்.

## துப்பாக்கி பெறமுடியாத துர்ப்பாக்கியம்!

இப்பொழுது மன்னுர் மாவட்டத்தில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்கள் தத்தம் கமங்களில் பயிர் பாதுகாப்புக்காகத் துவக்கு வாங்குதற்கான உத்தரவுப் பத்திரம் கோரி அரசிடம் சமர்ப்பிககப்படுகின்ற விண்ணப்பப்பத்திரங்கள் யாவும் "பாதுகாப்புக்கருதி சிபார்சு செய்யப்படவில்லை" என்னும் குறிப்புடன் மன்னுர் உதவிப் பொலீஸ் அதிபரினுல் நிராகரிக்கப்படுகின்றனவாம்.

தமிழ்பேசும் மக்களுக்குத் துவக்கு வாங்க அனுமதியளிக்க ஏன் அஞ்சுகின்றது? இததீர்மானம் பொலீஸாரின் தன்னிச்சைப்படியே நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? அல்லது அரசின் ஆணைப்படியேதான் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? ஏன் இந்தப் பாரபட்சம் தமிழ்பேசும் மக்கள் தத்தம் உயிரையும் பயிர்களையும் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் துவக்கு உத்தரவுப் பத்திரம் இனிமேலாவது வழங்கப்படுமா? தமிழ் பேசும் மக்கள் நாட்டுப் பாதுகாப்புக்கு விரோதமானவர்கள் என்றும், தமிழ் பேசும் மக்கள் அல்லாதவர் நாட்டுக்கு விசுவாசமானவர்கள் என்றும் அரசு எண்ணுகின்றதா? —தகவல் "கடுகு"

## காவலுக்குவந்...

—1-ம் பக்கத் தொடர்

கேட்ட பெண்கள் இருவரும் அழத்தொடங்கினர். இதற்கிடையில் அவர்கள் பஸ்ஸினுள் இடம்மாறி இருந்தனர்.

பஸ் மதவாச்சியை தாண்டியதும் இந்த இராணுவ வீரர்கள் பெண் ஒருத்தியின் கையைப் பிடித்து இழுத்து 'கெட்அப்' என்று கூறினுர்களாம்இதனுல்பீதியடைநத பெண்கள் பின் ஆசனத்தில் இருந்தஇளைஞரைப்பார்த்து அழவே அவர்கள் இளைஞரை நெருங்கிவந்து அவரிடம் "சிங்களம் தெரியுமா?" என்று சிங்களத்தில் கேட்டனராம். அதற்கு அவர் தெரியாது என்று கூறவே "சிங்களம் ஞாபகத்திற்கு வரும் வரை அடிப்பேன்" என்று கூறி அடிக்கத் தொடங்கினுராம்.

குறிப்பிட்ட இளைஞரை காலாலும் கையாலும் அடித்ததுடன் கீழேபோட்டு வயிற்றில் ஏறி மிதித்தனர். கத்தியால் குத்தவும் எத்தனித்தனர்.

வவுனியாவை பஸ் நெருங்கியபோது இளைஞருடன் சமாதானமாகப்பேசி, சிகரட் கொடுத்து தாஜாபண்ணவும் முயன்றனர். ஆனுல் இளைஞர் மறுத்ததுடன் யாழ்பபாணம்வர இருந்த அவர்கள் வவுனியாவில் இறங்கிக்கொண்டனர்.

பின்னர் மன்னுரில் இருந்து வந்த பஸ்மூலமாக யாழ்ப்பாணம் வந்து, யாழ் பஸ்டிப்போமூலமாக பொலீசில் முறைப்பாடு செய்ததுடன் யாழ் உதவி அரசாங்க அதிபரிடமும் முறையிட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியால் இவர்களை நம்பியா—இவர்களின் பாதுகாப்பை நம்பியா நாம் பிரயாணம் செய்வது? என்று தமிழர்கள் பீதியடைந்துள்ளனர்.


### ஆரோக்கியமான வாழ்விற்கு

மில்க்வைற் மெடிக்கேட்டட் சோப் வாங்கி உபயோகியுங்கள். கைக்கடக்கமான 50 சதம் அரைக்கட்டியும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

### ஓர் மில்க்வைற் தயாரிப்பு


இப்பத்திரிகை கொழும்பு -12, 194 ஏ. பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org